**காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனி- 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனியின் (''கம்பனி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்காமை

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 23.17 ஆம் பிரிவிற்கு இணங்க ஒப்பந்த வருமானம் மற்றும் செலவினம் அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்குரிய ஒப்பந்தப் பணிகளின் பூர்த்திக் கட்டத்திற்கமைய இனங்காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் கம்பனியின் ஒப்பந்த வருமானமான ரூபா 72.40 மில்லியன் நியமத்தின் பிரகாரம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமம் 23.17 இன் பிரகாரம் சேவை வழங்குநரால் சான்றுபடுத்தப்பட்ட பணிகள் மற்றும் 2020-12-31 ஆந் திகதியில் உள்ளபடியான எமது பொறியியலாளரினால் குறித்த வருடத்தில் சான்றுபடுத்தப்பட்ட பணியின் அளவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம், சேவை வழங்குநரால் சான்றுபடுத்தப்பட்ட பணியின் பெறுமதிக்கமைய ஒப்பந்த வருமானம் இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இருப்பினை கணக்கு வைப்பதற்கான சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 13.4 ஆம் பிரிவின் பிரகாரம், இருப்பு கிரயம் அல்லது தேறிய நிகரப் பெறுமதி ஆகியவற்றின் குறைவான பெறுமதியில் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கம்பனியிடம் காணப்பட்ட ரூபா 13.23 மில்லியன் முடிவுப் பொருள் இருப்பினை மதிப்பீடு செய்யும் போது தேறிய நிகரப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படாது இருப்பு கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்தது. | அனைத்து இருப்புக்களும் (FIFO) இன் கீழ் பேணப்படுவதுடன், தேறிய நிகரப் பெறுமதி மற்றும் கிரயத்திற்கமைய இருப்பினை கணிப்பீடு செய்யும் போது கிரயம், தேறிய நிகரப் பெறுமதியை விட குறைவான பெறுமதியை கொண்டிருப்பதால் இருப்பு கிரயத்திற்க மதிப்பிடப்பட்டது. | நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம், இருப்பு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 2.26 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், இனங்காணப்பட்ட நட்டங்களை துரிதமாக நிதிச் செயலாற்றல் அறிக்கையில் நட்டமொன்றாக இனங்காணப்பட வேண்டிய போதிவும், 2021-2017 ஆம் காலப்பகுதியினுள் கம்பனியால் நிறைவேற்றப்பட்ட தோல்வியடைந்த செயற்திட்டங்களின் கிரயமான ரூபா 24.39 மில்லியன் அவ்வாறு நட்டமொன்றாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது நடைமுறை வேலையாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | 2021-2018 ஆம் காலப்பகுதியினுள் பிரச்சினைக்குரிய வேலைத்தளமாக இனங்காணப்பட்ட பின்வரும் ஒப்பந்தங்களின் பிரச்சினைகள் தீரும் வரை நடைமுறை வேலையாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த வேலைத்தளத்தின் பிரச்சினைகளை தீர்ப்பனவு செய்த பின்னர் 2021 ஆம் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கிற்கு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்த செயற்திட்டங்களின் பட்டியல்கள் சேவை வழங்குநரால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் ஒப்பந்த நட்டம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நியம இலக்கம் 3.14 – பரீட்சை மீதியில் கடந்த வருடத்தின் இலாபமாக ரூபா 3.64 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தொடர்புடைய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய செலவினமான குறிப்பு இலக்கம் 30 இன் பிரகாரம் அந்த பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | இந்த செலுத்த வேண்டிய செலவினமான ஐந்தொகையில் குறுங்கால பொறுப்புக்களின் கீழ் தனியாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எதிர்வரும் வருடங்களின் போது குறிப்பு இலக்கம் 30 இனுள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு நியம இலக்கம் 2.2.2 இன் பிரகாரம் கணக்கு ஆண்டு ஒன்று நிறைவடைந்து திட்டவட்டமாக இனங்காணப்பட்ட கடன்பட்டோருக்காக மாத்திரம் ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 2 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 20,138,019 ஆன மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட பெற வேண்டிய ரூபா 374,233 தொகையான 9 கடன்பட்டோரிடம் இருந்தான கடன் மீதிகளுக்காக ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளபட்டிருக்கவில்லை. | எம்மால் திட்டவட்டமாக இனங்காணப்பட்ட கடன்பட்டோருக்காக மாத்திரம் ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்படுவதுடன் எமது கடன்பட்டோர் மற்றும் கடன்பட்டோர் ஒதுக்கங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன்பட்டோரிடமிருந்து கடனை சேகரிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்களிடமிருந்து அந்தத் தொகை எமக்கு கிடைப்பதற்கு நிமித்தமாக உள்ளது. மேலும் இந்தப் பணத்தின் ஒரு தொகுதி 2021 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு கிடைத்துள்ளது. | அனைத்து கடன்பட்டோரும் திட்டவட்டமாக இணங்காணப்பட்டு ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வி அடைந்த 12 ஒப்பந்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா.6,566,361 தொகை 2012 ஆம் ஆண்டு முதல் நடைமுறை வேலையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நட்டத்தை முன்கொண்டு வந்து இலாபத்திற்கு சீராக்காது மீளாய்வாண்டின் செலவினம் ஒன்றாக பதிவளித்தமையால் மீளாய்வாண்டின் ஒப்பந்த இலாபம் அந்த அளவினால் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தது. | இந்த 12 ஒப்பந்தங்களுக்குரிய பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் ஒப்பந்தம் நிறைவடைந்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட குறைபாடுகளை திருத்தியமையின் பின்னர் மேற்கொண்ட செலவினம் என்பதால் அந்த பணத்தை அறவிடமுடியாதுள்ளது. அதன் பிரகாரம் 2019 கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் இந்த பணம் 2020 ஆம் ஆண்டிற்கான செலவினமாக பதிவளிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த பெறுமதி சேவை வழங்குநரின் சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்படாததுடன் இந்த பணத்தை அறவிடுவதில் சிக்கலான நிலைமையொன்று காணப்பட்டது. | கடந்த வருடங்களுக்கு உரிய சீராக்கங்கள் அந்த வருடத்திற்கு உரித்தாகும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கம்பனியின் நிர்மாண செயற்றிட்டங்கள் கைத்தொழிற்சாலையில் இருந்து கிடைத்த வருமானம் ஆகியவற்றை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா.75 மில்லியனால் வீழ்ச்சியடைந்து இருந்ததுடன் மீளாய்வாண்டின் கம்பனி செயற்பாட்டு நட்டம் ரூபா.91.02 மில்லியன் ஆகும். அவ்வாறே கடந்த 05 காலப்பகுதியினுள் கம்பனியின் கைத்தொழிற்சாலைகளின் பங்களிப்பானது தொடர்ச்சியாக மறை பெறுமதியை கொண்டிருந்ததுடன் அந்த பெறுமதிகள் மீளாய்வாண்டின் போது ரூபா.42 மில்லியன் மறை பெறுமதியாக காணப்பட்டது. இவ்வாறே வருமானம் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் கம்பனி பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்துவதற்கு இயலுமை காணப்படாமை கம்பனியின் தொடர்ச்சியான நிலவுகைக்கு பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது நாட்டில் நிலவிய கொவிட் நிலைமையின் அடிப்படையில் நிர்மாண செயற்றிட்டங்கள் இடம்பெறாமையால் நிர்மாண செயற்றிட்டங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் தொழிற்சாலைகளுக்கும் இந்த நிலைமை நேரடியாக தாக்கமளித்துள்ளது. சிமெந்துடன் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளல் மற்றும் உள்ளக உற்பத்திகள் மற்றும் போட்டியிடமுடியாமை அடிப்படையில் வரியுடன் உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாமை ஆகியவை தொடர்ச்சியாக தொழிற்சாலை நட்டமேற்றும் நிலைமைக்கு உள்ளாவதற்கு காரணமாக அமைந்திருந்ததுடன் எதிர்காலத்தில் சிற்சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிமித்தமாக உள்ளது. | கம்பனியின் வியாபார பிரிவினை ஆக்கபூர்வமான முறையில் முகாமை செய்தமையின் அடிப்படையில் கம்பனியின் வருமானத்தை துரிதமாக அதிகரிக்க வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா.20,025,161 ஆன பெறவேண்டிய சுழற்சி முற்பண மீதியினுள் அறவிடப்படாது காணப்படும் 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கு உரிய ரூபா.2,626,578 ஆன முற்பண மீதி மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா.11,314,371 ஆன முற்பண மீதிகளை அறவிடுவதற்கு கம்பனியினால் | இந்த ரூபா 20,025,161 ஆன தொகை ICTAD வதிகளின் பிரகாரம் உரிய செயற்றிட்டத்தினை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள சுழற்சி முற்பணம் ஆவதுடன் பட்டியல்களை சமர்ப்பித்த பின்னர் இவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஒப்பந்த பட்டியல்களை செலுத்தாது நிறுத்தியதன் அடிப்படையில் ரூபா.11,936,153.15 ஆன சுழற்சி முற்பணத் தொகை தீர்ப்பதற்கு | பெறவேண்டிய முற்பணங்களை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடியாதுள்ளதுடன் ரூபா.8,089,007.85 ஆன ஒப்பந்தங்கள் நிறைவடைந்தவாறு காணப்படுவதுடன் பட்டியல்களை சமர்ப்பித்த பின்னர் தீர்க்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா.74,582,406 ஆன பெறவேண்டிய பிடி காசு மீதியினுள் 2-5 வருட காலத்திறகுரிய 34,564,493 ஆன முற்பண மீதி மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா.26,334,301 ஆன முற்பண மீதிகளை அநவிடுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பெறவேண்டிய ரூபா.74,582,406 ஆன பிடி காசில் ரூபா.17.0 மில்லியனான தொகைக்கு உரிய ஒப்பந்தங்கள் இந்த வருடத்தில் நிறைவு செய்யப்பட்டவாறு உள்ளதுடன் எஞ்சிய பணத்தை பெற்றுக்கொள்வதற்குரிய கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் எமது அமைச்சின் ஊடாகவும் இந்த பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான வியாபார கடன்பட்டோரிடமிருந்து கம்பனிக்கு அறவிடப்படவேண்டிய ரூபா.72,656,276 ஆன மீதிகள் 1-2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா.2,109,876 தொகையும் 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட கால்களுக்குரிய ரூபா.26,337,108 தொகையும் 5 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு உரிய ரூபா.8,952,943 தொகையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக 18 கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்படவேண்டியதாக நிலவிய ரூபா.11,515,198 தொகையில் எதுவித பணமும் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா.73,656,276.13 ஆன பணத்தில் ரூபா.23.0 மில்லியன் தொகை இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறவேண்டிய மீதிகள் ஆகும். மேலும் ரூபா.0.45 மில்லியன் மீதி ஒன்று எல்.ஆர்.டீ.சீ. சேவைகள் கம்பனியிடமிருந்து பெறவேண்டியவை ஆகும். முழுமையான தொகையில் ரூபா.3.54 மில்லியன் ஐயக்கடனாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் மூலம் ரூபா.38.46 மில்லியன் கிடைக்க வேண்டியுள்ளதுடன் நகர அகிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து ரூபா.7.82 மில்லியன் கோரப்பட்டுள்ளது. மேலும் சிறைச்சாலைகள் திணைக்களத்திடமிருந்து ரூபா.13.64 மில்லியன் பெறவேண்டியாதாக உள்ளதுடன் அவற்றுள் 03 மில்லியனான தொகை இதுவரையிலும் கிடைத்துள்ளது. ஏனைய பணம் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. | அறவிடவேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் பணிகளுக்காக தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் 4 நிறுவனங்களுடனும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த கடப்பாடுகளில் இருந்து அகன்று இருந்த போதிலும் அதற்காக வழங்கப்பட்டிருந்த | இந்த ரூபா.282,616 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அந்த நிறுவனங்களால் உரிய புத்தகங்கள் சமப்படுத்தப்பட்டு நிவைு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவை 10 வருடங்களை விட பழமையானவை என்பதால் 2021 ஆம் ஆண்டின் போது புத்தகங்களில் இருந்து | பெறவேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.282,616 ஆன வைப்புத் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்த வைப்புகளுக்குரிய சான்றிதழ்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா.47,124,471 ஆன செலுத்த வேண்டிய சுழற்சி முற்பண மீதியான ரூபா.15,038,730 தொகையில் 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக ரூபா.20,794,782 தொகையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியதாக நிலவியது. கம்பனி இடைநிறுத்தியுள்ள 11 செயற்றிட்டங்களுக்கு உரியதாக கடந்த வருடத்தின் இறுதியில் நிலவிய ரூபா.12,630,077 ஆன சுழற்சி முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா.47,124,471 ஆன செலுத்த வேண்டிய சுழற்சி முற்பணத் தொகை ICTAD வதிகளின் பிரகாரம் உரிய நிறுவனங்களினால் எமக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா.22,986,306.88 ஆன முற்பணங்கள் நிறுத்தப்பட்டுள்ள நிர்மாணங்களுக்கு உரியவை என்பதால் எஞ்சியுள்ளது. அந்த நிறுவனங்களுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் இந்தப்பணத்தை தீர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். எஞ்சிய சுழற்சி முற்பணத்தை சேவை வழங்குநர் நிறுவனத்திடம் இருந்து பட்டியல்களை தீர்த்த பின்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய முற்பணங்களை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா.60,265,583 ஆன செலுத்த வேண்டிய பிடிகாசு தொகையினுள் 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா.26,783,078 தொகையான முற்பண மீதிகள் மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா.18,197,670 தொகையான மற்பண மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா.60,265,583 ஆன செலுத்த வேண்டிய பிடிகாசு எமது சேவை வழங்குநரால் எமக்கு விடுவிக்கப்பட்ட பின்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அந்த பணம் தற்போது கோரப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக வியாபார மற்றும் ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா.123,530,841 ஆக இருந்ததுடன் அவற்றுள் 2-5 வருட காலத்திற்குட்பட்ட ரூபா.48,447,824 | இந்த செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதி ரூபா.119,449,039 தொகையில் ரூபா.67,468,742.56 தொகை இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன தீர்க்கப்படாத மீதி மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா.15,747,375 ஆன மீதிகளை தீர்ப்பனவ செய்வதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டியதுடன் ரூபா.27,048,528.11 தொகை எல்.ஆர்.டீ.சீ. சேவைகள் கம்பனிக்கு செலுத்த வேண்டியது ஆகும். எஞ்சிய ரூபா.24,931,768.33 ஆன கடன் கொடுத்தோர் மீதிகளில் ரூபா.13,893,481.84 தொகை இது வரையிலும் தீர்க்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா.4,081,802 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்க்கப்படாத மீதி ரூபா.3,324,728 ஆகும். | இந்த பட்டியல்கள் உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அது சான்றுப்படுத்தப்படாத பட்டியல்கள் சான்றுப்படுத்தப்பட்டு பணம் கிடைத்த பின்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா.27.05 மில்லியன் வ/ப எல்.ஆர்.டீ.சீ. சேவைகள் (தனியார்) கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் அந்த பெறுமதி வ/ப எல்.ஆர்.டீ.சீ. சேவைகள் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக ரூபா.27.62 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அவற்றிகு இடையே ரூபா.0.57 மில்லியனான வெறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | இந்த<br><br>ரூபா 0.57 மில்லியன பெறுமதியான பட்டியல்கள் சான்றுப்படுத்தப்பட்டிராமையால் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் உரிய வகையில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் உத்தியோகத்தர் ஒருவர் 2018 ஆம் ஆண்டில் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களுக்காக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா.647,992 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு இணங்கியுள்ளதுடன் கம்பனியின் நிதி நிலைமை நல்ல நிலைமைக்கு வந்ததுடன் ரூபா.647,992 ஆன தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் உரிய வகையில் காண்பிக்கப்பட வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) கம்பனியின் நிதி செயல்வழிக் கோவையின் 3.2.1(இ) 4 ஆம் பிரிவு | ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்படும் முற்பணங்கள் குறித்த பணி நிறைவடைந்து 20 நாட்களினுள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 5 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.131,454 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 678 நாட்கள் முதல் 1457 நாட்கள் கடந்துள்ள போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவற்றுள் ரூபா.100,000 ஆன தொகை இது வரையிலும் தீர்க்கப்பட்டுள்ளது. ரூபா.5,000 ஆன தொகை விற்பனை பிரிவிற்கு பண பரிமாற்றல்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. ரூபா.10,000 ஆன தொகை குறித்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு இறுதி கணக்குகளை தயாரிப்பதற்கும் அனுப்பப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான ரூபா.24,454 இனை உரிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தாமதத்திற்கான காரணம் பட்டியல்கள் கிடைப்பதற்கான தாமதம் ஆகும். | குறித்த பணி நிறைவடைந்ததுடன் முற்பணம் உடனடியாக தீர்க்கப்படவேண்டும். |
| (ஆ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றிக்கையின் 8.1.4 ஆம் பிரிவு | குறித்த பிரிவிற்கமைய அரச கம்பனி ஒன்று சுயநிதி ஈட்டலின் அடிப்படையில் நடாத்திச் செல்லப்பட வேண்டிய போதிலும் ககடந்த வருடங்களில் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ரூபா.264 மில்லியன் கடன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் மொத்த சொத்துக்களின் சதவீதமாக 36% இனை பிரதிநிதிதுவப்படுத்தியது. மேலும் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கடந்த வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி | இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேற்கொண்ட கடல் மணல் செயல்திட்டத்திற்காக இவ்வாறு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் இந்த செயற்றிட்டம் தோல்வி அடைந்தமையால் நிறுத்தப்பட்டு குறித்த பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | கம்பனி சுய நிதி ஈட்டலின் அடிப்படையில் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். |

மேலதிகப் பற்றுக்களில் இருந்து மீளாய்வாண்டின் இறுதியில் தொடர்ந்தும் தீர்ப்பதற்கு எஞ்சியுள்ள தொகை ரூபா.10.11 மில்லியன் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கம்பனியின் வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 91.02 மில்லியனாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் வரிக்கு முன்னரான தேறிய நட்டமான ரூபா 48.97 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டுக்கான நிதிப் பெறுபேறுகளில் ரூபா 42.05 மில்லியனான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக ஒப்பந்த வருமானம் மற்றும் சீமெந்து மற்றும கற்கள் மற்றும் அச்சுக் கற்களின் விற்பனை வருமானம் முறையே ரூபா 61 மில்லியனால் மற்றும் ரூபா 10 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் நிதிச் செலவினம் ரூபா 22 மில்லியனால் உயர்வடைந்தமை மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்தமை தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது கம்பனியின் ஒப்பந்த வருமானம் ரூபா 61 மில்லியன் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் ஒப்பந்த வருமானம் குறைவடைந்திருந்தது. இந்த காரணத்தினால் ஆண்டிற்கான மொத்த இலாபம் ரூபா.10.8 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் மொத்த இலாப வீதம் 7.65% மறை பெறுமதியினைக் கொண்டிருந்தது. அவ்வாறே கம்பனியின் அனைத்து தொழிற்சாலைகளினது திரண்ட பங்களிப்பு ரூபா.42 மில்லியனான மறை பெறுமதியில் காணப்பட்டமை இதற்கு காரணமாக அமைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 0.71% மற்றும் 0.56% ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம் கம்பனியின் கடன் முகாமைத்துவ நடைமுறை மகிழ்சிகரமான நிலையில் காணப்படவில்லை என்பதுடன் அந்த விகிதங்கள் அதனை விட குறைந்த பெறுமதியை கொண்டிருந்தமையால் கம்பனியின் செயற்பாடு மூலதன இடர்களுக்கு முகம் கொடுத்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் வியாபார கடன்கொடுத்தோர் ரூபா.46.6 மில்லியனால் அதிகரித்துள்ளதுடன் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 64% அதிகரிப்பாகும். மீளாய்வாண்டினுள் எதுவித தொகையும் தீர்க்கப்படாத 18 கடன்கொடுத்தோரின் கடன்மீதி ரூபா.1.2 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(ஈ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் கடன் மூலதன விகிதம் 31.65 வீதத்தினால் குறைவடைந்த போதிலும் கம்பனியின் நீண்டகால கடனிற்கு மூலதன விகிதம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 1.11% இனால் உயர் பெறுமதியினை கொண்டிருந்தமையினால் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மை தொடர்பில் நிச்சயமற்ற நிலை ஒன்று வெளிப்படுத்தப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் மொத்த கடன்கொடுத்தோர் ரூபா.328 மில்லியன் ஆவதுடன் கடந்த வருடத்தில் அந்த பெறுமதி ரூபா.277 மில்லியன் ஆனமையால் மீளாய்வாண்டின் போது கடன்கொடுத்தோர் 18% இனால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்சாலைகளின் பங்களிப்பு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி மீளாய்வாண்டுக்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம், கம்பனியின் 08 தொழிற்சாலைகள் மற்றும் வேலைத் தளத்தின் பங்களிப்பு ரூபா 20.12 மில்லியன் ஆன போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பங்களிப்பு ரூபா 42.45 மில்லியன் மறைப் பெறுமதி ஆகும். | பாதீட்டின் பிரகாரம் இலாபமான நிலைக்கு உள்ளாக்க நடவடிக்கை எடுத்த போதிலும், இலங்கையில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை இதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்ததுடன், கேள்வி குறைவடைந்தமையின் அடிப்படையில் எமது விற்பனையிலும் வீழ்ச்சியொன்று ஏற்பட்டது. அதன் பிரகாரம் இந்த தொழிற்சாலைகளின் பங்களிப்பு மறைப் பெறுமதியில் நிலவியமைக்கு தாக்கம் செலுத்தியிருந்தது. | தொழிற்சாலையின பங்களிப்பினை நேர் பெறுமதியில் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கம்பனியின் நாவல பெரசவி கைத்தொழிற்சாலை நீங்கலாக ஏனைய 07 தொழிற்சாலைகள் மற்றும் வேலைத் தளத்தின் தொழிற்பாட்டு பெறுபேறுகளின் பங்களிப்பு ரூபா 62.25 மில்லியனான மறைப் பெறுமதியை கொண்டிருந்தது. விற்பனைகள் வீழ்ச்சியடைந்தமை, சந்தையை இலக்காகக் கொண்ட விற்பனை மூலோபாங்கள் பயன்படுத்தப்படடாமை, முகாமைத்துவ செயற்திறனின்மைகள் போன்ற விடயங்கள் இந்த நட்டத்திற்கு தாக்கமளித்திருந்தது. அவ்வாறே, மேற்படி பிரிவுகளிலிருந்து மீளாய்வாண்டின் போது கம்பனி எதிர்பார்த்த வருமானம் ரூபா 230.78 மில்லியனாக காணப்பட்டதுடன், உள்ளபடியான வருமானம் ரூபா 28.23 மில்லியன் ஆகும். | எம்மால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக சீமெந்து, கல் தொழிற்சாலை நீங்கலாக ஏனைய தொழிற்சாலைகளின் நட்டம் கடந்த வருடங்களை விட குறைத்துக் கொள்ள இயலுமானதாக இருந்ததுடன் கடல் மணலை பக்கற்றுக்களில் அடைத்தல் மூலம் தொழிற்சாலை பாரிய நட்டத்தினை அடைந்தமையால் அது தாய் கம்பனிக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் எதிர்வரும் வருடங்களில் இலாபம் ஈட்டுவதற்கு எதிர்பார்துள்ளது. அதற்கமைய மீளாய்வாண்டின் போது கம்பனி எதிர்பார்த்த வருமானத்தை அடைய முடியாதிருந்தது. | வேலைத்தளத்தினை இலாபம் ஈட்டும் நிலைக்கு உட்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நாவல சீமெந்து உற்பத்தி வேலைத்தளத்தின் நட்டம் ரூபா.13.95 மில்லியனாக காணப்பட்டதுடன் அது கடந்த வருடங்களுக்கு ஒப்பாக ரூபா.2.85 மில்லியன் அதிகரிப்பாகும். மேலும் மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட விற்பனைகளுக்கு ஒப்பாக உள்ளபடியான விற்பனை வருமானம் 78% இனால் குறைவடைந்தமை, ஆண்டின் வேலைத்தளத்தின் ஊழியர் சம்பளக் கிரயம் ரூபா.10.3 மில்லியனாக காணப்பட்டதுடன் அது மீளாய்வாண்டின் வேலைத்தளத்தின் மொத்த வருமானத்தை விட ரூபா.2.2 மில்லியன் அதிகரிப்பையும் காண்பித்ததுடன் ஊழியர் கிரயத்தின் அதிகரிப்பு நாவல சீமெந்து கற்கள் வேலைத்தளத்தின் செயற்பாட்டு நட்டம் அதிகரித்தமை தொடர்பில் தாக்கமளித்திருந்த போதிலும் வேலைத்தளத்தின் நட்டத்தை குறைத்து இலாபம் ஈட்டும் நிலைக்கு உள்ளாக்குவதற்கு கம்பனி உரிய முகாமைத்துவ நடைமுறை ஒன்று காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக நாடு சுமார் 6 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டமை அதன் காரணமாக இலங்கையின் நிர்மாணக் கைத்தொழில் பாதிக்கப்பட்டமையால் பாதிடப்பட்ட விற்பனைகளுக்கு ஒப்பாக உள்ளபடியான விற்பனை வருமானம் 78% இனால் குறைவடைந்தது. எமது இந்த தொழிற்சாலையின் நிரந்தர ஊழியர்கள் மற்றும் பதவியணிக்கு மூடப்பட்ட 6 மாத காலப் பகுதியில் முழுமையாக சம்பளம் செலுத்த நேர்ந்தது. எனினும் விற்பனைகள் குறைவடைந்தமையின் அடிப்படையில் மொத்த வருமானத்தை விட ரூபா.2.2 மில்லியன் சம்பளமாக செலுத்த நேர்ந்தது. மேலும் அந்த சம்பளக் கிரயம் வேலைத்தளத்தின் மொத்த வருமானத்திற்கு ஒப்பாக 128% அளவினை கொண்டிருந்தது. இதனை குறைப்பதற்கு எம்மால் நிரந்தர பதவியணியின் ஒரு பகுதியை ஈரவலயப் பூங்காவிற்கு மாற்றப்பட்டதுடன் எதிர்காலத்தில் முழுமையாக நிரந்தர பதவியணியை உற்பத்தி செய்யும் கற்களின் அளவின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | வேலைத்தளத்தினை இலாபம் ஈட்டும் நிலைக்கு உட்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| (ஈ) | நாவல வேலைத்தளத்தின் உற்பத்தி பணிகளை உரிய முறையில் பேணுவதற்கு மாற்று நடவடிக்கை பின்பற்றாது அதன் ஊழியர்களுக்கு கடந்த வருடம் முதல் கெரவலப்பிட்டிய மணல் உற்பத்திக்காக ஈடுபடுத்தியமையால் மீளாய்வாண்டின் பங்களிப்பானது ரூபா.4.75 மில்லியன் மறை பெறுமதியை கொண்டிருந்தது. அது கடந்த வருடத்திற்கு | எம்மால் மாற்று நடவடிக்கையாக இவ்வாறு அதன் ஊழியர்களின் கடந்த வருடம் முதல் கெரவலப்பிட்டிய மணல் செயல் திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கொவிட் தொற்று நோய் காரணமாக இரும்பு நிர்மாணக் கைத்தொழில்பாதிக்கப்பட்டதால் அதன் ஊழியர்களுக்கும் | வேலைத்தளத்தில் இலாபம் ஈட்டும் நிலைக்கு உள்ளாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பாக ரூபா.2.95 மில்லியன் அல்லது 164 அதிகரிப்பாகும். அவ்வாறே மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட விற்பனை வருமானம் ரூபா.14 மில்லியனான போதிலும் ஆண்டினுள் எந்தவித விற்பனை வருமானமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சம்பளம் செலுத்த நேர்ந்தது. இது ஆண்டினுள் இடம்பெற்றிருந்தால் இந்த 4.7 மில்லியன் நட்டம் அந்த அளவினை விட அதிகமாக காணப்படும் என்பதுடன் மூலோபாய தீர்மானமாக இந்த ஊழியர்களை உடனடியாக கெரவலப்பிட்டிய தொழிற்சாலைக்கு இடமாற்றம் செய்து எம்மால் தற்காலிக அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கெரவலப்பிட்டிய தொழிற்சாலையில் சேவையாற்றும் ஊழியர்களை அதிலிருந்து அகற்றி கிரயத்தை குறைத்துள்ளதுடன் உச்ச செயற்திறனுடன் நிரந்தர பதவியணி பயன்படுத்தப்பட்டது. | |
| (உ) | மீளாய்வாண்டின் போது கெரவலப்பிட்டிய கடல் மணல் கழுவும் செயற்றிட்டத்தின் மூலம் ரூபா.151.13 மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடல் மணல் கழுவி கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கும் செயற்றிட்டத்தில் மீளாய்வாண்டின் போது சுமார் 36,000 கியுப் மணல் உற்பத்தியினை விநியோகிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான உற்பத்தி 9,305 கியுப் மணல் ஆகும். அவ்வாறே கம்பனி இந்த செயற்றிட்டதிலிருந்து மீளாய்வாண்டின் போது ஈட்டிய வருமானம் ரூபா.13.45 மில்லியன் மாத்திரம் ஆனமையால் அது எதிர்பார்த்த வருமானத்தின் 9% இருந்தது. அவ்வாறே செயற்றிட்டத்திற்கு தேவையான பக்கோ இயந்திரம் மற்றும் ரிப்பர் வாகனத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டிருந்ததுடன் அதற்காக ரூபா.2.68 மில்லியன் செலவினம் | கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக நாடு 6 மாதங்களுக்கு மேல் மூடப்பட்டிருந்தமையால் எமது உற்பத்தி இடைநிறுத்தப்பட்டுடன் கொவிட் தொற்று நோய் கைத்தொழிற்சாலையில் உள்ள ஊழியர்களிடையே பரவியமையால் அந்த தொழிற்சாலையை தனிமைப்படுத்தல் மத்திய நிலையமாக மாற்ற நேர்ந்தது. அதற்கமைய எதிர்பார்த்த வருமானத்தை அண்மிக்க முடியாதிருந்ததுடன் கடந்த வருடத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு வழங்கிய பதிலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | எதிர்பார்த்த உற்பத்தியை மேற்கொண்டு செயற்றிட்டத்தை இலாபமீட்டும் நிலைக்கு உள்ளாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டிருந்ததுடன் அது மொத்த வருமானத்தின் 20% ஆன அளவினை கொண்டிருந்தது. | | |
| (ஊ) | கடந்த வருடத்தின் ரூபா.404.40 மில்லியன் செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட மணல் பக்கற்றில் அடைக்கும் கைத்தொழிற்சாலையில் இருந்து மாதாந்தம் ரூபா.8.22 மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மணல் பக்கற் உற்பத்தி தொடர்பில் மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்ப்பட்டிராததுடன் செயற்றிட்டத்தில் மீளாய்வாண்டினுள் நிடைத்த ரூபா.26.70 மில்லியன் நட்டத்துடன் ஆண்டின் இறுதியில் கம்பனி பெற்றுக்கொண்ட திரண்ட நட்டம் ரூபா.54.97 மில்லியன் ஆகும். மேலும் மீளாய்வாண்டில் இந்த செயற்றிட்டத்தின் மூலம் கம்பனி எதிர்பார்த்த வருமானம் ரூபா.316.8 மில்லியனான போதிலும் உள்ளபடியாக பெற்றுக்கொண்ட வருமானம் ரூபா.0.36 மில்லியன் வரை குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. | இந்த கைத்தொழிற்சாலை தாய் கம்பனிக்குரிய காணியிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உரிய கற்கை ஒன்றினை மேற்கொள்ளாது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த செயற்றிட்டத்தின் மூலம் எதிர்காலத்திலும் எதிர்பார்த்த இலாபத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் என்பது முகாமைத்துவத்தின் கருத்தாகும். அரச பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் கம்பனிக்கு செலவாகியுள்ள கிரயத்திலிருந்து விடுவிப்பதற்கு தாய்கம்பனி நடவடிக்கை எடுக்கும். | தொடர்ச்சியாக நட்டம் ஈட்டும் நிலைமையிலிருந்து மீண்டெழுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கடந்த வருடத்தின் இறுதியில் ஹிங்குராங்கொட தொழிற்சாலையின் உற்பத்தி பணிகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கைத்தொழிற்சாலையின் உபகரணங்கள் எவையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஹிங்குராங்கொட தொழிற்சாலையினை நடாத்தி செல்லும் போது பலவருடங்களாக தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டம் ஒன்று ஏற்பட்டமையால் நிறுத்தப்பட்டதுடன் கைத்தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது வேறு வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயலற்று வைத்திருக்காது பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் செயற்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் திருகோணமலை கைத்தொழிற்சாலையின் ஒட்டுமொத்த விற்பனை வருமானம் ரூபா.0.06 மில்லியனாக காணப்பட்டதுடன் | திருகோணமலை கைத்தொழிற்சாலையை சுற்றிலும் நிலவும் போட்டித்தன்மை மற்றும் மூலப்பொருட்களை தேடுவதில் உள்ள சிரமங்கள் | சொத்துக்களை செயலற்று வைத்திருக்காது பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைத்தொழிற்சாலையின் நட்டம் ரூபா.0.91 மில்லியனாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் தொழிற்சாலையின் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. | காரணமாக இந்த தொழிற்சாலை பலவருடங்களாக நட்டம் ஈட்டியவாறு நடாத்தப்பட்டிருந்ததுடன் மேற்கூறியவற்றின் பிரகாரம் அந்த தொழிற்சாலை தொடர்பிலலும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஐ) | அம்பாறை கைத்தொழிற்சாலை மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட விற்பனையாக ரூபா.5.71 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான விற்பனை வருமானம் ரூபா.2.40 மில்லியனாக காணப்பட்டதுடன் அது கடந்த வருடத்தின் விற்பனைக்கு ஒப்பாக ரூபா.3.31 மில்லியன் அல்லது 58% குறைவாகும். | எம்மால் இலாபம் ஈட்டும் நிலைமைக்கு அண்மிப்பதற்கு பாதீடு தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக அந்த இலக்கினை அடைந்து கொள்ள தவறியிருந்த போதிலும் கடந்த வருடத்தினை விட நட்டத்தை குறைத்துக்கொள்ள இயலுமானதாக இருந்தது. | பாதீட்டினை உச்ச மட்டத்தில் நடைமுறைப்படுத்தி இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

**3.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 1382 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா.4,555,193 பங்கு இலாபம் வெளியிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆறுவருடங்கள் கடந்துள்ள நிலையில் பங்கு இலாபத்தினை செலுத்த கம்பனி தவறியிருந்தது. | அந்த காலத்தில் கம்பனி இலாபம் ஈட்டியதன் அடிப்படையில் அந்த பங்கு இலாபம் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் பணம் செலுத்துவதற்கு போதிய நிதி மூலங்கள் இல்லாதிருந்தமையால் தொடர்ச்சியாக இந்த பங்கு இலாபத்தினை செலுத்த முடியாதுள்ளது. நிதி நிலைமை நல்ல நிலைக்கு உள்ளானதன் பின்னர் இதனை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வெளியிடப்பட்ட பங்கு இலாபத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் நிதி தேவைப்பாடுகள் கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் அல்லது வணிக வங்கி ஒன்றின் ஊடாக நிறைவேற்றிக் கொள்ளாது 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சம்பளம் மற்றும் வேதனங்களை செலுத்துவதற்காக தாய் கம்பனியான இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தில் ரூபா.64 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த | கம்பனியின் நிதித் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு வணிக வங்கி ஒன்றிடம் கடன் கோரியிருந்த போதிலும் அதற்காக பிணையாக வைப்பதற்கு கம்பனியிடம் சொத்து ஒன்று இல்லாதிருந்தமையால் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா.64 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டது. | கடன் பணம் மற்றும் வட்டியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் தொகை மற்றும் கூட்டுத்தாபனத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒட்டு மொத்த கடன்தொகைக்காக மீளாய்வாண்டினுள் கம்பனியால் செலுத்த வேண்டிய கடன் வட்டி ரூபா.33.50 மில்லியனும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்த வேண்டிய மொத்த கடன் வட்டியாக ரூபா.60.98 மில்லியன் நிலவியமை அவதானிக்கப்பட்டது. | இதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த கட்டிடத்தை உரிய கம்பனிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்தினை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வழங்கியுள்ளதுடன் அது கிடைத்தவுடன் இந்த பணத்தை தீர்த்து முடிவுறுத்தப்படும். | |
| (இ) | மீளாய்வாண்டினுள் எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் மேற்கொள்ளப்படாத இரு நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மீதி ரூபா.220,826 ஆகும். | இந்த HNB வங்கியின் மற்றும் பொரளை இலங்கை வங்கியில் உள்ள இரு கணக்குகளையும் 2021 ஆம் ஆண்டில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டுநிதிக் கணக்கினை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடல் மணல் பக்கற்றுக்களை உற்பத்தி செய்வதற்கு கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக தேசிய கட்டுமாண கம்பனி சமர்ப்பித்த விலைக்கேள்வி மதிப்பீடு செய்யப்படாது ரூபா.265.03 மில்லியன் செலவிடப்பட்டு வெளிநாட்டு வழங்குநர் ஒருவரின் ஊடாக இதனை நிர்மாணிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தமையால் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்ட முறைக்கேடுகள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு வழங்குநர் ஒருவரிடமிருந்து இந்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தமையால் அவதானிக்கப்பட்ட மோசடிகள் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் உரிய அறிக்கைகள் எனக்கு கிடைத்த பின்னர் மோசடிகளுடன் தொடர்புடைய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். | விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்தி உரிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது பணிகள் முடிவுறுத்தப்பட வேண்டிய ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா.10.69 மில்லியனாக காணப்படுவதுடன் இலங்கை மின்சார சபைக்குரிய காணி ஒன்றினை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் மீளாய்வாண்டின் | மின்சார சபைக்குரிய செயற்றிட்டத்துடன் தொடர்புடைய திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான முற்பணத் தொகையான ரூபா.2,232,882.25 தொகை மாத்திரம் எமக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான போதிலும் | இணங்கியுள்ளவாறு ஒப்பந்த பணிகளை மேற்கொள்வதற்கும் பட்டியல்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியில் உள்ளபடியான நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றம் முறையே 21% மற்றும் 60% இற்கு இடைப்பட்ட குறைந்த பெறுமதியாக காணப்பட்டது. | செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் சேவை வழங்குநர் உரிய பதில் வழங்கியிராமையால் செயற்றிட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதத்தில் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய ரூபா.19.89 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியுடைய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மண்டபம் ஒன்றினை நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பௌதீக செயன் முன்னேற்றம் 75% ஆக இருந்த போதிலும் நிதி செயன் முன்னேற்றம் 37% மாத்திரம் ஆகும். | நிதியேற்பாடு போதாமையின் காரணமாக சேவை வழங்குநரால் கொடுப்பனவுகள் தாமதமாகியமையால் நிதி செயன் முன்னேற்றம் குறைவான பெறுமதியை கொண்டுள்ளது. இந்த காரணத்தின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டினுள் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் காரணமாகவும் செயற்றிட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதில் தாமதம் ஏற்பட்ட போதிலும் இது வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளவாறு ஒப்பந்த பணிகளை நிறைவு செய்து பட்டியல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரூபா.13.90 மில்லியன் பெறுமதியான முண்டிகல ஆராண்ய சேனாசனவின் இரண்டு மாடிக் கட்டிடத்தினை இணங்கியுள்ளவாறு ஒப்பந்த பணிகளை மேற்கொள்வதற்கும் பட்டியல்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒப்பந்தம் 2016 ஜூலை 20 ஆம் திகதி கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது 120 நாட்களினுள் நிறைவு செயப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக மற்றும் நிதி செயன் முன்னேற்றம் முறையே 40% மற்றும் 32% ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதயில் இந்த ஒப்பந்தத்தின் மூலம் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா.4.79 மில்லியன் ஆகும். | இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்ட பணிகள் மற்றும் மேலதிக பணிகளுக்காக அறவிடப்பட வேண்டிய பணம் எமக்கு செலுத்தப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் சேவை பெறும் தரப்பினருக்கு கடிதம் மூலம் அவ்வப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த செயற்றிட்டத்தின் மேலதிக பணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கும் இது வரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. | இணங்கியுள்ளவாறு ஒப்பந்த பணிகளை நிறைவு செய்து பட்டியல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2019.11.16 ஆம் திகதியில் நிறைவு செய்வதற்கு இணங்கிய ரூபா.26.93 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியுடைய சிறைச்சாலை கட்டிடத்தினை திட்டமிடல் மற்றும் நிர்மாண ஒப்பந்தம் 2012 ஆம் ஆண்டின் போது கம்பனி பொறுப்பேற்றிருந்ததுடன் | இந்த செயற்றிட்டம் 2021/04/03 திகதியளவில் அனைத்து பணிகளும் நிறைவு செய்யப்பட்டு 2021/04/23 ஆம் திகதி பணிகள் ஒப்படைக்கப்பட்டு இறுதிப் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணங்கியுள்ளவாறு ஒப்பந்த பணிகளை நிறைவு செய்து பட்டியல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒப்பந்தம் பொறுப்பேற்கப்பட்டு 08 வருடங்கள் கடந்திருந்தாலும் ஒப்பந்தத்தின் பௌதீக செயன் முன்னேற்றம் 53% மாத்திரமே ஆகும். அவ்வாறே கடந்த வருடத்தின் சேவை பெறுநர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா.15.10 மில்லியன் இறுதிப்பட்டியலுக்குரிய பணம் 2021 ஒக்டோபர் மாதம் வரையிலும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டின் கம்பனி எதிர்பார்த்த ஒப்பந்த வருமானம் ரூபா.388 மில்லியன் ஆன போதிலும் அடையப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா.72.40 மில்லியன் ஆகும். அதன் மூலம் உள்ளபடியான வருமானம் எதிர்பார்த்த வருமானத்தின் சதவீதமாக 19% ஆன அளவினை கொண்டிருந்தது. | உலகமெங்கிலும் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக நாட்டினை முழுமையாக மற்றும் பகுதியளவில் பல சந்தர்ப்பங்களில் மூடிய காரணத்தால் நிறுவனத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்த முடியாதிருந்ததுடன் புதிய செயற்றிட்டங்கள் மற்றும் நிலவிய செயற்றிட்டங்களை எதிர்பார்த்தவாறு நிறைவேற்ற முடியாதிருந்தது. | இணங்கியுள்ளவாறு ஒப்பந்த பணிகளை நிறைவு செய்து பட்டியல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டினுள் கம்பனியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நான்கு செயற்றிட்டங்களின் திரவ நட்டம் (Liquidated Damages) ரூபா.7.20 மில்லியன் சேவை பெறுநரால் கழிக்கப்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தத்தினை மேற்கொள்ளும் போது சேவை பெறுநரர் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டமை மற்றும் உரிய அறிவுரைகள் உரிய நேரத்தில் வழங்கப்படாமை ஆகிய காரணங்களால் குறித்த பணியை நிறைவேற்றுவதில் தாமதமாகியதுடன் எம்மிடமிருந்து அறவிடப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து இந்த தொகையை கோரியிருந்த போதிலும் இது வரையிலும் சிறந்த பதில் கிடைக்கவில்லை. | இணங்கியுள்ளவாறு ஒப்பந்த பணிகளை நிறைவு செய்து பட்டியல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | ரூபா.13.40 ஒப்பந்த பெறுமதியுடைய சபுகஸ்கந்த விஷாக வித்தியாலயத்தின் மண்டபத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2020 ஏப்பிரல் 24 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அதன் நிதி முன்னேற்றம் 31% ஆக காணப்பட்டதுடன் அத்திகதியில் உள்ளபடியாக எந்த பௌதீக முன்னேற்றமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்றிட்டத்திற்கான முற்பணத் தொகையான 30% 2021/21 பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக இந்த செயற்றிட்டத்தினை பௌதீக ரீதியில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்த காலம் கடந்திருந்தது. இதன் காரணமாக இந்த செயற்றிட்டம் உப ஒப்பந்தம் வழங்குவதற்கு மீள விலைக்கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் இதற்கும் காலம் எடுக்கப்பட்டுள்ளது. | இணங்கியுள்ளவாறு ஒப்பந்த பணிகளை நிறைவு செய்து பட்டியல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கம்பனியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 105 அக இருந்ததுடன் அத் திகதியில் உள்ளபடியான பதவியணி 65 அக இருந்தமையால் அத் திகதியில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 40 ஆகும். அவ்வாறே அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத ஊழியர் எண்ணிக்கை 10 ஆகும். 40 வெற்றிடங்களில் ஊடக முகாமைத்துவ பதவியில் 05 வெற்றிடங்கள் 06 வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டதுடன் முகாமைத்துவ உதவியாளர் பதவி 13 மற்றும் 20 நிரந்தர தொழிலாளர் பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டது. | இடைமட்ட முகாமைத்துவ பதவிகளின் வெற்றிடங்களுக்காக அவ்வப்போது ஒப்பந்த அடிப்படையிலும் சேவை கையளிப்பு அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்ட போதிலும் அவர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். இவ்வாறான போதிலும் கம்பனியின் நிதி நிலைமையின் அடிப்படையில் இந்த வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படாததுடன் சில பதவிகளுக்கு பதிற்கடமை நியமனங்கள் வழங்கி அந்த பதவிகளின் கடமைகள் மேவுகைப்படுத்தப்பட்டது. | வெற்றிடங்களை துரிதமாக நிரப்ப வேண்டியதுடன் பதவியணியின் நிலைமை தேவைக்கேற்ப அங்கீகாரத்துடன் நடாத்திச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பொது முகாமையாளர் பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அந்த பதவியை அங்கீகரிக்காது குறித்த பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | கம்பனியினால் பொது முகாமையாளர் ஒருவரை இணைத்துக் கொள்ளாது நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அது தொடர்பில் தலைவர் உள்ளடங்கலான பணிப்பாளர் சபையினால் கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 02/2016 இற்கு இணங்க இந்த பதவிக்காக HM 2-1 தரத்தின் கீழ் சம்பளத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றின் மூலம் உயர் முகாமைத்துவ பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனியின் ஊடக முகாமைத்துவ மட்டத்திலான பதவி ஒன்றான கணக்காளர் பதவி பல வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டதுடன் அந்த பதவியில் பதிற்கடமைக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பொறுப்புடனான பதவியொன்றிற்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக 2021 ஆம் ஆண்டு முதல் உரிய ஆலோசனை கோரியிருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கம்பனியால் 2020ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 04 மாதங்கள் தாமதித்து அதாவது 2021 யூலை 27 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் முறையாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக இவ்வாறு தாமதமாகியுள்ளது. | பொது திறைசேரியின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/12 இன் 4.2.2 பந்திக்கமைய கம்பனியினால் மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கூட்டம் ஒன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு இருந்தன. | கொவிட் தொற்று நோய் காரணமாக மீளாய்வாண்டின் போது 03 பணிப்பாளர் சகைக்கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு இருந்தன. | உரிய முறையில் கூட்டங்கள் நடாத்தப்படவேண்டும். |

### 4.3 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம் கம்பனியால் மீளாய்வாண்டுக்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்க முடியாதிருந்தது, 2021 ஆம் ஆண்டின் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.4 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கம்பனியால் ரூபா 2.22 மில்லியனான மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த கொள்வனனவிற்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டில்களுக்கு இணங்க பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய நிலமையின் அடிப்படையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்க முடியாதிருந்தது, 2021 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.5 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் கணக்காய்வு பணிகளுக்கு உள்ளக கணக்காய்வு பிரிவொன்றினை தாபித்திருக்காததுடன் கம்பனியின் தாய்க் கம்பனியான இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 1 கணக்காய்வு ஐயவினா மாத்தரம் வெளியிடப்பட்டது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கையின் இயலுமைக்கமைய அது போதுமானதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பிரதி பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) இன் கண்காணிப்பின் கீழ் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இருவரின் பங்களிப்புடன் உள்ளக கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கையின் இயலளவு தற்போது விரிவடைந்தவாறு உள்ளமை தொடர்பில் அறியப்பட்டுள்ளது. அதற்கமைய கம்பனியின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் கணக்காய்வு நடவடிக்கைகளை வளமானதாக வியாபிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கம்பனியின் முகாமைத்துவத்திற்கு பங்களிக்கும் நோக்கில் தாய்க் கம்பனியின் கணக்காய்வுப் பிரிவிற்கு கடமை ரீதியான பொறுப்புக் கூறும் உள்ளக கணக்காய்வு உதவியாளர் ஒருவர் முழு நேரமாக கம்பனியின் சேவைக்கு இணைப்பு செய்வதற்கு | உள்ளக கட்டுப்பாட்டினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளக கணக்காய்வு பலப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | (கம்பனியில் நிலவும் ஊழியர் குறிகாட்டியின் பிரகாரம்) கம்பனியின் கட்டுப்பாட்டுச்சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் கம்பனியின் பாதிடப்பட்ட வருமானம் ரூபா 672 மில்லியனாக காணப்பட்டதுடன், உள்ளபடியான வருமானம் ரூபா 141 மில்லியனாக காணப்பட்டதுடன், அது பாதிடப்பட்ட வருமானத்தின் 21 சதவீதமாக காணப்பட்டதுடன், பாதிடப்பட்ட வர்த்தக இலாபம் ரூபா 137 மில்லியன் ஆன போதிலும், உள்ளபடியான வர்த்தக நட்டம் ரூபா 6 மில்லியன் ஆகும். மேலும் பாதிடப்பட்ட தேறிய இலாபமான ரூபா.84 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான இலாபம் ரூபா.86 மில்லியனாகவும் காணப்பட்டது. அதற்கமைய கம்பனியின் பாதிடப்பட்ட தரவுகள் மற்றும் உண்மையான தரவுகளினை ஒப்பிடும் போது பாதிடப்பட்ட தரவுகள் நடைமுறைக்கு சாத்தியமற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதாக உள்ளமையால் பாதிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவம் உரிய தீர்மானம் எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பாதீட்டுடன் மாதாந்த கணக்கு அறிக்கைகளை தயாரிப்பதுடன் எமது அமைச்சிற்கும் இந்த கணக்குகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. நாட்டில் நிலவிய நிலைமையின் பிரகாரம் மற்றும் நிர்மாணத்துறை வீழ்ச்சியடைந்தமை மற்றும் மணல் செயற்றிட்டம் தோல்வியடைந்தமையின் அடிப்படையில் இவ்வாறு பாதிடப்பட்ட இலக்குகளை அடைய முடியாதிருந்தது. | பாதீடானது முகாமைத்துவத்தினால் முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய மற்றும் P.E.D/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு அறிக்கைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் 5.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீட்டு அறிக்கை மீளாய்வாண்டு ஆரம்பித்து 15 நாட்களுக்கு முன்னர் சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு உரிய நிறுவனங்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய நிலைமையின் பிரகாரம் மற்றும் எமக்கு திட்டவட்டமான அமைச்சொன்று நியமிக்கப்பட்டிராமையின் அடிப்படையில் மற்றும் பணிப்பாளர் சபை ஒன்று நியமிப்பதற்கு தாமதமானதன் அடிப்படையில் உரிய அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |